IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No. 13 /2024

dated : 21.08.2025

D.W.2

Name நாசர்கான்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகளை எனக்கு 10 ஆண்டுகளாக தெரியும். வாதியைத் தெரியும் பழக்கம் ஏதும் இல்லை. எனக்கு அழைப்பாணை ஏதும் வரவில்லை. பிரதிவாதியின் அழைப்பின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு விவரம் தெரியும் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியாது. RS கோல்டு பீடி என்ற தயாரிப்பு தேனி மாவட்டத்தில் பிரபலமான பீடி பொருள் என்றால் சரியல்ல. பிரதிவாதி 2015 முதல் பீடி நிறுவனம் நடத்தி வருகிறார் என்ற விவரத்திற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதி நிறுவனத்திலும் RS கோல்டு என்ற வார்த்தை இடம்பெறும் என்றால் சரிதான். பிரதிவாதி பெயரில் போலி பீடி தயார் செய்தது குறித்து குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதி நிறுவனங்களின் தயாரிப்பிலிருந்து கிடைக்கக்கூடிய பீடியை சுவை, மனம் போன்றவை வெவ்வேறு முறைகளைக்

கொண்டது என்று சொன்னால் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதி நிறுவனத்தில் உள்ள பீடியின் உருவ ஒற்றுமை மற்றும் உச்சரிப்பு ஒற்றுமை ஒரேபோல் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளது என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எனக்கு 10 ஆண்டுகளுக்கு மேல் தெரிந்த நபர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.08.21 18:07:58 +0530